TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

8075805

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் Tirunelveli PS: காவல்நிலையம் Vigilance and Anti Corruption Year: ஆண்டு 2021 FIR No.: மு.த.அ. எண் 08/2021 Date: நாள் 23.08.2021

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 Sections பிரிவுகள்: 7 (a) and (c)
(ii) Act சட்டம்: IPC Sections பிரிவுகள்: 120B, 167, 109 and 34
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 2018 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம்
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 11.08.2021 Time : நேரம் 16.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் O/o the Deputy Director of Health Services, Tirunelveli.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி 3 Km North East

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tmt.C.Sivasankari (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Tr.G.Maria Antony.
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 30.05.1979 (d) Nationality : நாட்டினம் INDIAN (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Inspector of Police (g) Address : முகவரி VIGILANCE AND ANTI CORRUPTION, NAGERCOIL

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1.திரு.**S.**செந்தில்குமார்,**MD.,** முன்னாள் துணை இயக்குநர், (சுகாதாரப்பணிகள்), திருநெல்வேலி சுகாதார மாவட்டம், 2.திரு.**S.**முத்துகுமார், அரசு ஆம்புலன்ஸ் ஓட்டுநர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கடையம், திருநெல்வேலி சுகாதார மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

Preliminary Enquiry conducted

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)

10. Total value of properties stolen / involved :

11. Inquest Report / Un-natural death Case No. if any

12. FIR Contents (Attach separate sheet, if required) :

எதிரிகள் :
1)திரு.**S.** செந்தில்குமார்,**MD.,**
வயது **34/2021**
த/பெ.**M.**சேம்ராஜ்,
முன்னாள் துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்),
திருநெல்வேலி சுகாதாரமாவட்டம்.
**2)** திரு.**S.**முத்துகுமார்,
வயது **36/2021**
த/பெ.**N.**சங்கரநாராயணன் (லேட்),
அரசு ஆம்புலன்ஸ் ஓட்டுநர்,
அரசு ஆரம்ப சுகாதாரநிலையம் கடையம்,
திருநெல்வேலி சுகாதாரமாவட்டம்.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது</u> :- நான் (C.சிவசங்கரி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு @ நாகர்கோவில்) இன்று 23.08.2021 தேதி காலை 15.00 மணிக்கு திருநெல்வேலி பிரிவு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அலுவலகத்தில் வைத்து, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையின் தலைமை அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெற்ற குறிப்பாணை PE.44/2019/PH/TI நாள் 06.08.2021-ன் படி மேற்சொன்ன குற்ற அலுவலர்கள் தவறான ஆதாயம் அடைய வேண்டும் என்ற பொதுவான எண்ணத்துடன் 2018-ம் ஆண்டில் கூட்டாக சேர்ந்து திருநெல்வேலி சுகாதார மாவட்டத்திற்குட்பட்ட

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr. D. Robin Gnanasingh, Inspector of Police, V&AC, Tirunelveli Dett., to take up the investigation / Refused investigation / transferred to PS

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost

23/8/2021

14. Signature / Thumb impression of the Complainant / Informant

15. Date & time of despatch to the court

23-8-2021 at 15.45 h.

C. SIVASANKARI
Inspector of Police,
V&AC, Kanniyakumari
Detachment.

* CCP 290-11(Govt-2) 50,000 Cps-21-1-9/2011 15b-2

அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் காலியாக உள்ள துப்புரவாளர்(Sweeper), துப்புரவுப் பணியாளர்(Sanitary worker), மருத்துவமனைப்பணியாளர்(Hospital Worker), ஆண் செவிலிய உதவியாளர் (Male Nursing Assistant), பெண் செவிலிய உதவியாளர் (Female Nursing Assistant) ஆகிய பணியிடங்களை "பல்நோக்கு மருத்துவமனைப் பணியாளர்" (Multi Purpose Hospital Worker) என்ற ஒரே பெயரில் நேர்முகத்தேர்வு நடைபெற்றதாகவும், அத்தேர்வில் பணிநியமனத்திற்கு தகுதியுள்ள திரு.S.பாபு மற்றும் திருமதி.R.கொளசல்யாவுக்கு பணி நியமன ஆணை பெற்று தர ரூ.2,50,000/- பணம் கேட்டதாக உள்ள புகார் மனு மற்றும் அதனோடு இணைந்த குறுந்தகடு விவரங்களின்படி நடந்த தொடக்கநிலை விசாரணையின் அடிப்படையில் திருநெல்வேலி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 8/2021-ன் படி 1-வது குற்ற அலுவலர் மீது இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 120-B, 167, 109, 34 படியும் ஊழல் தடுப்பு சட்டம் 1988 திருத்தியமைக்கப்பட்ட சட்டம் 16/2018 சட்ட பிரிவு 7(a) படியும், 2-வது குற்ற அலுவலர் மீது இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 120-B, 167, 109, 34 படியும் ஊழல் தடுப்பு சட்டம் 1988 திருத்தியமைக்கப்பட்ட சட்டம் 16/2018 சட்ட பிரிவு 7(c) படியும் இந்த வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

குற்ற அலுவலர்களில் 1-வது குற்ற அலுவலர் திரு.S.செந்தில்குமார் M.D, முன்னாள் துணை இயக்குநர்(சுகாதாரப் பணிகள்) திருநெல்வேலி சுகாதார மாவட்டம் ஆக 19.07.2017 முதல் 01.12.219 வரை பணியாற்றி வந்தார். 2-வது குற்ற அலுவலர் திரு.S.முத்துகுமார், அரசு ஆரம்ப சுகாதார நிலையம் கடையம், திருநெல்வேலி மாவட்டத்தில் அரசு ஆம்புலன்ஸ் ஓட்டுநர் ஆக 28.02.2011 முதல் தற்போது வரை பணியாற்றி வருகிறார். எனவே இவர்கள் ஊழல் தடுப்பு சட்டம் 1988 சட்டப்பிரிவு 2 (c)-ன் படி பொது ஊழியர்கள் ஆவார்கள்.

பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்புமருத்துவத்துறை, திருநெல்வேலி சுகாதாரமாவட்டத்தின் கீழ் இயங்கும் அரசு ஆரம்ப சுகாதாரநிலையங்களில் காலியாக உள்ள 55 பல்நோக்கு மருத்துவமனைப்பணியாளர் (Multi Purpose Hospital Worker) பணியிடங்களை நிரப்ப நேர்முகத்தேர்வுக்கு குற்றஅலுவலர்-1 தலைவராகவும், திரு.P.கருப்பசாமி, மாவட்ட மலேரியா அலுவலர் மற்றும் திரு.S.அன்புசெல்வம், நேர்முகஉதவியாளர், துணைஇயக்குநர் (சுகாதாரபணிகள்) அலுவலகம் ஆகியோர் உறுப்பினராகவும் அரசாணை(நிலை) எண்.325 நாள் 20.11.2012-ன் படியும் மற்றும் இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை, சென்னை-6 அவர்களின் கடித எண்.D.Dis. No.26116/PHC-7/A3/2015-ல் தேர்வு குழுவில் நிர்வாக அலுவலர் A.O/கண்காணிப்பாளர் நிர்வாகம் இடம் பெற்றிருக்க வேண்டும் என்ற உத்தரவுக்கு எதிராக அவரை குழுவில் சேர்க்காமலேயே தேர்வுக்குழு அமைக்கப்பட்டு அவர்களுக்குகீழ் கண்காணிப்பாளர், உதவியாளர், இளநிலை உதவியாளர் ஆகியோர்கள் அடங்கிய 6 குழுக்கள் மூலம் சான்றிதழ் சரிபார்க்கப்பட்டு நேர்முகத்தேர்வு நடத்தப்பட்டுள்ளது. முடிவாக அலுவலக நடைமுறைகளையும், தேர்வுக்கான சட்டபூர்வமான நடைமுறைகளையும் கடைபிடிக்காமல் அதனை தவிர்த்து குற்ற அலுவலர்-1ன் உத்தரவுப்படி தகுதியான

விண்ணப்பதாரர்களை தேர்ந்தெடுக்காமல் பணிநியமன உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

Scheduled Caste(SC) இனசுழற்சி விபரப்பட்டியலில் வரிசை எண். 46-ல் 03.05.2018-ம் தேதி நேர்காணலில் கலந்துகொண்டு பணிநியமன ஆணை பெற்றுள்ள திருமதி.B.பாக்கியலெட்சுமி த/பெ.கு.நடராஜன் என்பவருடைய விண்ணப்ப எண்.551 ஆகும். இவருக்கு கல்வித்தகுதிக்கு 2 மதிப்பெண்களும், நேர்காணலுக்கு 18 மதிப்பெண்களும் வழங்கப்பட்டு மொத்த மதிப்பெண்கள் 21 என்று உள்ளது. ஆனால் இவருடைய மொத்த கூட்டு மதிப்பெண்கள் 20 ஆகும். இதே போல் Scheduled Caste(SC) இனசுழற்சி விபரப்பட்டியலில் பக்கம் 24-ல் 02.05.2018-ம் தேதி நேர்காணலில் கலந்து கொண்ட திருமதி. சொ.சுமதி த/பெ.மா.அப்பாஸ் என்பவருடைய விண்ணப்ப எண்.283 ஆகும். இவருக்கு கல்வித்தகுதிக்கு 3 மதிப்பெண்களும், முன்அனுபவத்திற்கு 1 மதிப்பெண்ணும், நேர்காணலுக்கு 16 மதிப்பெண்களும் வழங்கப்பட்டு மொத்தம் 20 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். இதேபோல் Scheduled Caste(SC) இனசுழற்சி விபரப்பட்டியலில் பக்கம் 63-ல் 03.05.2018-ம் தேதி நேர்காணலில் கலந்துகொண்ட திருமதி.S.உலகம்மாள், த/பெ J.ஜோதிமணி என்பவருடைய விண்ணப்ப எண்.761 ஆகும். இவருக்கு கல்வித்தகுதிக்கு 10 மதிப்பெண்களும், நேர்காணலுக்கு 10 மதிப்பெண்களும் வழங்கப்பட்டு மொத்தம் 20 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். மேற்படி மூன்று பேரும் ஒரே மதிப்பெண்தான் பெற்றுள்ளார்கள். ஆனால் திருமதி.B.பாக்யலெட்சுமிக்கு பணி ஆணை வழங்க வேண்டும் என்பதற்காக அவர் பெற்ற மதிப்பெண் கூட்டுத்தொகையை வேண்டுமென்றே 21 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் பார்த்தால் திருமதி. B.பாக்கியலெட்சுமி த/பெ.கு.நடராஜன் என்பவருக்கு பணிநியமன ஆணையானது மதிப்பெண்கள் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது என்பது தவறாகும்.

புகார் மனுதாரர் திரு.S.பாபு தான் தாழ்த்தப்பட்ட வகுப்பை(SC) சேர்ந்தவர் என்றும், தன்னுடைய மனைவி R.கௌசல்யா பிற்படுத்தப்பட்ட வகுப்பை(BC) சேர்ந்தவர் என்றும், தாங்கள் கலப்புத் திருமணம் செய்துள்ளதால் தங்களுக்கு முன்னுரிமை இருப்பதாகவும் அதனடிப்படையில் இருவரும் திருநெல்வேலி பொதுசுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்புமருந்துத் துறை, திருநெல்வேலி சுகாதார மாவட்டத்தில் பல்நோக்கு மருத்துவமனைப்பணியாளர்(Multi Purpose Hospital Workers) வேலைக்கு விண்ணப்பித்திருந்ததாகவும் 02.05.2018ம் தேதி நேர்காணலுக்கு சென்று வந்திருந்த நிலையில் 06.08.2018-ம் தேதி 13.00 மணியளவில் புகார் மனுதாரர் திரு.S.பாபு-வின் 9677401508 என்ற கைப்பேசி எண்ணிற்க்கு 9944734713 என்ற கைப்பேசி எண்ணிலிருந்து முன் பின் தெரியாத ஒருநபர் தொடர்பு கொண்டு பல்நோக்கு மருத்துவபணியாளர் பணிநியமனம் தொடர்பாக அந்த வேலைக்கு பணிநியமன ஆணை பெற்று தர ரூ.2,50,000/- பணம் கேட்டதாகவும், லஞ்சமாக பணம் கொடுத்தால்தான் பணிநியமன ஆணை வழங்கப்படும் என்று அரசு பணியிடத்திற்கு லஞ்சம் கேட்டு பேசியது உண்மைதான் என்று கூறியுள்ளார்கள். நிரப்பப்பட்டுள்ள பணியிடங்கள் அனைத்தும் லஞ்சம் பெற்றுக்கொண்டு நேர்மையற்ற முறையில் முறைகேடாக நிரப்பப்பட்டுள்ளதாகவும் மேற்படி கைப்பேசியில் பேசிய Audio Recording –ஐ CDயில் பதிவு செய்துள்ளதாகவும் கூறினார்கள். இதே புகார் மனுவை குற்ற அலுவலர்-1னிடம் புகார்மனுதாரர் கொடுத்தற்கு புகார்மனுவைபற்றி குற்றஅலுவலர்-1 விசாரணை செய்யாமலும்,

எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலும், புகார்தாரருக்கு **3-ஆம் நபர் தெரிவித்த தொலைபேசி கருத்துகளுக்கு இவ்வலுவலகம் பொறுப்பாகாது** என தன்னுடைய கடித ஓ.மு.எண்.07327/அ3/18 நாள்:20.11.18-ன் படி பதில் அளித்துள்ளதையும், அலைபேசி அழைப்பு விவரங்கள் சம்மந்தமான ஆவணம், அலைபேசியிலிருந்து குறுந்தகட்டில் பதிவிறக்கம் செய்யப்பட்டுள்ள உரையாடல் ஆகியவற்றின் மூலம் அவ்வாறு பேசிய நபரான குற்றஅலுவலர்-2 S.முத்துக்குமார் என்பவர் கடையம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள TN 32 G 0241 எண் கொண்ட ஆம்புலன்ஸ் வண்டியில் டிரைவராக தன் கீழ்பணிபுரியும் அரசு ஊழியர் என்று தெரிந்துகொண்டே குற்ற அலுவலர்-2ன் குற்றச்செயலுக்கு உடந்தையாக இருந்து சுய ஆதாயத்திற்காக அவர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல். அவருக்கு சாதகமாக செயல்பட்டுள்ளார். மேலும் குற்ற அலுவலர்-2க்கு பல்நோக்கு சுகாதார மருத்துவமனைப்பணியாளர் பணிநியமனம் சம்மந்தமாக எவ்வித அதிகாரமும் இல்லாத சூழ்நிலையிலும், குற்ற அலுவலர்-1 தான் பணிநியமனம் செய்ய அதிகாரம் படைத்தவர் என்ற உண்மை நிலையில் மேற்படி பணியிடத்திற்க்கு பணிநியமன ஆணை போட்டு தர சொல்லுகிறேன் என்று குற்ற அலுவலர்-2 புகார்தாரரிடம் அலைபேசியில் கூறுவதிலிருந்து குற்ற அலுவலர்-2ன் குற்ற செயலுக்கு பணி நியமன ஆணை வழங்க அதிகாரம் படைத்த குற்ற அலுவலர்-1ம் பரஸ்பரம் உடந்தையாக செயல்பட்டுள்ளார். மேலும் அதனால் தான் புகார்தாரர் குற்ற அலுவலர்-2 மீது குற்ற அலுவலர்-1னிடம் புகார் கொடுக்கப்பட்ட பின்பும் அந்த புகார் சம்மந்தமாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது தெரிய வருகிறது.

குற்றஅலுவலர்-2 திரு. S.முத்துக்குமார் அரசு ஊழியராக இருந்து கொண்டு பல்நோக்கு மருத்துவமனைப்பணியாளர் பணி நியமன ஆணை வாங்கி தருவதாக ரூ. 2,50,000/- லஞ்சமாக கேட்டுள்ளார் என்பதும்,. மேலும் இதுசம்மந்தமாக புகார்தாரர் குற்றஅலுவலர்-1னிடம் நடவடிக்கை எடுக்க கேட்டு புகார் மனுவுடன் CD-ஐ இணைத்து கொடுத்த பின்னரும் புகார் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலும் குற்ற அலுவலர்-2ஐ காப்பாற்றும உள்நோக்கத்துடனும், ஆதாய நோக்கத்துடன் மேற்படி குற்றத்திற்கு பரஸ்பரம் உடந்தையாகவும் செயல்பட்டுள்ளார்.

எனவே 1-வது குற்ற அலுவலர் திரு.S.செந்தில்குமார் M.D, துணை இயக்குநர்(சுகாதாரப் பணிகள்) திருநெல்வேலி சுகாதார மாவட்டம் குற்ற செயலானது இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 120-B, 167, 109, 34 படியும் ஊழல் தடுப்பு சட்டம் 1988 திருத்தியமைக்கப்பட்ட சட்டம் 16/2018 சட்ட பிரிவு 7(a) படி தவறிழைத்ததற்கான முதல் நோக்கு வழக்கிற்கான ஆதாரம் உள்ளது.

2-வது குற்ற அலுவலர் திரு.S.முத்துகுமார் அரசு ஆம்புலன்ஸ் ஓட்டுநர், அரசு ஆரம்ப சுகாதார நிலையம், கடையம், திருநெல்வேலி மாவட்டம் குற்ற செயலானது இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 120-B, 167, 109, 34 படியும் ஊழல் தடுப்பு சட்டம் 1988 திருத்தியமைக்கப்பட்ட சட்டம் 16/2018 சட்ட பிரிவு 7(c) படி தவறிழைத்ததற்கான முதல் நோக்கு வழக்கிற்கான ஆதாரம் உள்ளது.

எனவே திருநெல்வேலி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 8/2021, இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 120-B, 167, 109, 34 படியும் ஊழல் தடுப்பு சட்டம்

1988 திருத்தியமைக்கப்பட்ட சட்டம் 16/2018 சட்ட பிரிவு 7(a) மற்றும் 7(c) படியும், மேற்சொன்ன சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையின் தலைமை அலுவலக உத்தரவு PE.44/2019/PH/TI நாள் 24.06.2021 படி மற்றும் அதனோடு இணைக்கப்பட்டிருந்த குற்ற அலவலா்கள் மீது விசாரணை மேற்கொள்ள தகுதி வாய்ந்த அலுவலா்களால் ஊழல் தடுப்பு சட்டம் 1988 திருத்தியமைக்கப்பட்ட சட்டம் 16/2018 பிரிவு 17(A) –ன்படி வழங்கப்பட்ட உத்தரவான அரசாணை(ப)எண்.**702** மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்(டி**2)** துறை நாள் **09.06.2021** ஆகியவற்றின் படியும் இன்று 23.08.2021 தேதி 15.00 மணிக்கு வழக்கு பதிவு செய்தேன்.

இந்த வழக்கின் அசல் FIR-ஐ கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் திருநெல்வேலி அவா்களுக்கும், FIR-ன் ஒரு நகலை புலன் விசாரணை அலுவலருக்கும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

23/8/2021

Inspector of Police,
V&AC, Kanniyakumari
Detachment.